**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.387/2025**

**PW - 1**

| | | |
|---|---|---|
| Name | : | கருப்பாயி ( LW.1 ) |
| Father's / Husband Name | : | க/பெ.வீரண்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மதுரை மேலூரில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் போன வீரண்ணன் எனது கணவர் ஆவார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு எனது கணவர் வெளியே செல்வதற்காக அவருக்கு சொந்தமான இரண்டு வாகனத்தை எடுத்துக்கொண்டு கட்டிப்பாளையம் அருகில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே சென்றபோது ஆம்னி கார் மோதி விபத்து ஏற்பட்டதாக விபத்து நடந்த இடத்தில் இருந்த நபர் என்னிடம் தகவல் தெரிவித்தார். கேள்விப்பட்டு நான் விபத்திற்கு நடந்த இடத்திற்கு வந்து பார்த்த போது விபத்தில் அடிப்பட்ட எனது கணவரை நாமக்கல் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக தெரிந்து கொண்டேன். பின்பு நான் மேற்சொன்ன முகவரிக்கு சென்று பார்த்தபோது எனது கணவர் மிகவும் மோசமான நிலையில் இருந்தார். சிகிச்சை பலனின்றி மறுநாள் எனது கணவர் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் தான் வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படு**கிறது. எனது கணவர் மேற்சொன்ன விபத்தினால் தான் இறந்து போனார். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை எதிரி சங்கர் தான் ஓட்டிவந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) எனக்கு எழுதப்படிக்க தெரியாது. போலிசார் எழுதிய புகாரில் தான் என்னிடம் கைரேகை பெறப்பட்டது என்றால் சரி. தேதியானது புகாரில் இடைச்சொறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரி. புகாரில் சம்பவம் குறித்து யார் எனக்கு தகவல் சொன்னார்கள் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. எனது கணவர் இறந்ததது தொடர்பாக நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சம்பவத்தை நேரடியாக நான் பார்க்கவில்லை.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 387/2025**

**PW - 2**

| | | |
|---|---|---|
| Name | : | **சக்திகண்ணன் ( LW. 2 )** |
| Father's / Husband Name | : | த/பெ.கிருஷ்ணசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து Flytutor Technologies Private Ltd நிறுவனத்தை நடத்தி வருகிறேன். விபத்தில் இறந்து போன வீரண்ணன் நாங்கள் முன்பு நடத்தி வந்த கல்லூரியின் உணவகத்தில் பணியாற்றி வந்தார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு 6வது மாதம் ஒரு நாள் காலை 08.00 மணியளவில் நான் எனது நிறுவனததிற்கு வந்த போது வீரண்ணன் தனது இருசக்கர வாகனத்தை ஓட்டி கொண்டு வந்துகொண்டிருந்தார். அப்போது அதே சாலையில் அவருக்கு பின்னால் வந்த ஆம்னி வேன் வீரண்ணன் வலது பக்கம் திரும்ப முயற்சித்த போது அவர் மீது மோதிவிட்டது. விபத்தை ஏற்படுத்தியது வெள்ளை நிற வாகனமாகும். ஆஜர் எதிரி தான் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆவார். விபத்தில் வீரண்ணனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. கை, கால்களிலும் காயங்கள் ஏற்பட்டது. விபத்தில் அடிப்பட்டவரை நானும், எனது நண்பர்களும் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்தின் காரணமாக சிகிச்சை பலனின்றி மறுநாள் அவர் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) விபத்தில் இறந்தவர், புகார் கொடுத்த அவரது மனைவி எங்கள் கல்லூரி உணவகத்தில் வேலை செய்தவர்கள் என்றால் சரி. சம்பவமானது நான்கு வழிசாலையில் நடைபெற்றது.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.387/2025**

**PW -3**

| | | |
|---|---|---|
| Name | : | சரோஜா ( **LW.5** ) |
| Father's / Husband Name | : | க/பெ.சின்னராசு |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது புல்லாக்கவுண்டம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் ஒருவருடத்திற்கு முன்பாக நான் பாரதி கல்லூரியில் இருந்து வேலையை முடித்து கொண்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது விபத்து குறித்து வேலக்கவுண்டம்பட்டி போலிசார் சம்பவயிடத்தில் வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து கொண்டிருந்தார்கள் . அதில் நான் சாட்சியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கைரேகை என்னுடையது தான். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. என்னுடன் பாலாமணி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) சம்பவயிடத்திற்கு வடக்கே ஒரு பெரிய வேப்பமரம் உள்ளது என்றால் சரி. அதன் அருகில் கம்மங்கூழ் விற்கும் கடை உள்ளது. போலிசார் எழுதிய தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் கைரேகை வைத்து கொடுத்தேன் என்றும் சொன்னால் சரி.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.